www.padippakam.com


# செந்தாரகை

சோசலிச ஐக்கிய இலங்கைக்காக சிங்கள, தமிழ் மொழிமூலம் வெளிவரும் செய்தித்தாள்

மலர் - 77
ஜூலை - 2010
இலங்கையில் செய்தித்தாளக பதிவுசெய்யப்பட்டுள்ளது.
விலை ரூ. 20/=


# மஹிந்த சிந்தனை ஒழிக்கப்பட்டுவிட்டது

**மஹிந்த சிந்தனை - வேலைத்திட்டம் - 84 வது பக்கம**

'நிறைவேற்றதிகார சனாதிபதிப் பதவியை ஒழிக்கின்றதும் நாட்டின் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குகின்றதுமான புதியதொரு அரசியலமைப்பை அனைவரினதும் இணக்கப்பாட்டுடன் முன்வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். அதுவரை சனாதிபதி உத்தியோக ரீதியில் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறுகின்றவாறு அரசியலமைப்புக்கு திருத்தங்களைச் சமர்ப்பிப்பேன். பாராளுமன்றம் தொடர்பில் சனாதிபதிக்குள்ள பொறுப்பை உறுதி செய்யும் பொருட்டு மாதத்திற்கு ஒரு தடவை பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வேன்.'

இது மஹிந்த ராஜபக்ஷ சனாதிபதி ஆவதற்காக மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பந்தியின் ஒரு பகுதியாகும். நாட்டு மக்களுக்கு தாம் வழங்கிய வாக்குறுதி உடன்படிக்கையை முற்று முழுதாக மீறி, மக்களுக்கு உரிய விதத்தில் அதைப் பற்றி அறிவிக்காது, பாராளுமன்றம், ஏனைய சமூக நிறுவனங்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் எவ்விதப் பேச்சுவார்த்தைக்கும் இடமளிக்காது ஒரு சர்வாதிகார ஆட்சியாளராகும் பொருட்டு அரசியலமைப்பைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இரண்டாவது தடவை ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அரசாங்கத்தின் உண்மையான தோற்றம் இவ்வாறு படிப்படியாகத் தோற்றமளிக்க ஆரம்பித்துள்ளது. சனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த ராஜபக்ஷ ஆட்சியின் மறைமுகமான நிகழ்ச்சி நிரல் தற்போது வெளிவந்துள்ளது. நாட்டிற்கு ஒரு சாபக்கேடாக இருந்த, ஜேஆரினால் அறிமுகப்படுத்தப்பட்ட மக்கள் துரோக அரசியலமைப்பை மாற்றியமைத்து சனாதிபதி ராஜபக்ஷவுக்கும் அதன் பின்னர் அவரது புதல்வருக்கும் எக்காலமும் ஆட்சியில் இருப்பதற்கு தேவையானவாறு அரசியலமைப்பைத் திருத்துவதே இந்த வேலைத் திட்டத்தில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதுவரை நிறைவேற்றதிகார சனாதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஜே.ஆர். ஜயவர்தனவில் இருந்து சந்திரிக்கா குமாரதுங்க வரை அவர்களது பதவிக் காலம் முடிவடைந்தன் பின்னர் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கின்ற பேராசை நிலவிவந்தது. ஆயினும் அந்த தனிப்பட்ட குறிக்கோளை ஆடை அணிந்தவாறு நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர்களால் முடியாதிருந்தது. ஏனெனில் அவர்கள் முழுச் சமூகம் மற்றும் முழு உலகத்தின் முன்னிலையிலும் நிர்வாணமாவார்கள் என்பதை புரிந்துகொண்டிருந்தமையினாலாகும். ஆயினும் தற்போதைய சனாதிபதி யுத்த வெற்றியின் புகழைக் கொள்ளையடித்து ஜே.ஆர். மற்றும் சந்திரிக்காவால் முடியாமற்போன அதிகாரப் பேராசையை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தயாராகின்றார்.

சுதந்திரம, சனநாயகத்தை அழித்தொழித்த, சுதேச கலாசாரம் உள்ளிட்ட முக்கியமான அம்சங்களை இல்லாதொழித்த யூ.என்.பி. காரர்கள் கூட தற்போது வெறுக்கின்ற முருமைத்தனம் பிடித்த, சர்வாதிகார அரசியலமைப்பை ஒழிப்பதற்காக சனநாயகத்தை மதிக்கின்ற அனைவரும் ஒரே போராட்ட அணியில் சந்தித்தல் வேண்டும். இதன் பொருட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து இனத்தவர்களும் ஒன்றிணைந்து போராடுதல் வேண்டுமென்பதை ஐக்கிய சோசலிசக் கட்சி தீவிரமாக வலியுறுத்துகின்றது.

# முஸ்லிம் பள்ளிகளில் இராணுவ சோதனை

கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள முஸ்லிம் பள்ளிகளுக்கு சமய அனுஷ்டானங்களுக்காக வருகை தருகின்ற முஸ்லிம் பக்தர்களைப் பற்றியும் பள்ளிகளின் வருமானம் மற்றும் அவற்றுக்குச் சொந்தமான சொத்துக்கள் பற்றியும் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் சிலர் சென்று விசேட விசாரணையொன்றைச் நடத்தியுள்ளதாக அறியவந்துள்ளது. கொம்பனித் தெருவிலுள்ள வீடுகளை உடைத்து காணிகளைச் சுவீகரித்ததைப் போன்று முஸ்லிம் பள்ளியை கொம்பனித் தெருவிலிருந்து அகற்றுவதற்கு இதனூடாக முயற்சி எடுக்கப்படுகின்றதா என்ற பெரும் சந்தேகம் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மக்களிடையே தோன்றியுள்ளதாக லங்கா ஈநியூஸ் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொம்பனித் தெரும் பகுதியில் 6 முஸ்லிம் பள்ளிகள் உள்ளதோடு, முழுமையாக நோக்குகின்ற விடத்து அப் பகுதியில் வாழ்கின்றவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களாவர். கடந்த தினத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தர்மசிறி எனும் உத்தியோகத்தர் ஒருவரும் இன்னொருவரும் முஸ்லிம் பள்ளிகளின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைகளின் அங்கத்தவர்களைச் சந்தித்துள்ளனர். ஒவ்வொரு பள்ளிக்கும் மத அனுஷ்டானங்களுக்காக எவ்வளவு பக்தர்கள் வருகின்றார்கள்? பள்ளிகளுக்கு பணம் எங்கிருந்து கிடைக்கின்றது? வெளிநாடுகளிலிருந்து பண உதவிகள் கிடைக்கின்றதா? பள்ளிகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் யாவை? பள்ளிகள் அமைந்துள்ள காணிகளின் உரிமை மற்றும் அவற்றின் பரப்பளவு ஆகியன பற்றிய விபரங்களை வினவியுள்ளனர். அவ்வாறு விபரங்களைக் கோரியுள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இருவரும் பள்ளிகளைப் படம் பிடித்துள்ளனர். பள்ளிகளைப் பற்றிய இவ்வளவு விபரங்களை விசாரிப்பது எதற்காகவென்று நிருவாகச் சபை அங்கத்தவர்கள் இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களை வினவிய போது, முஸ்லிம் பள்ளிகளை புனரமைப்பதற்காக மதிப்பாய்வொன்றை நடத்துவதாக அவர்கள் கூறியுள்ளனர். யுத்தத்தினால் அழிவடைந்த பிரதேசங்களில் புனரமைக்கப்பட வேண்டிய எவ்வளவோ முஸ்லிம் பள்ளிகள் இருப்பதனால், அவற்றைப் புனரமைப்பதே நடைபெற வேண்டியுள்ளதெனவும், தமது நிருவாகச் சபையினால் தமக்குரிய பள்ளிகளைப் புதுப்பித்தல் உட்பட பராமரிப்பதற்கு சிரமமில்லையென்றும் முஸ்லிம் மத குருமார்கள் அவர்களுக்குக் கூறியுள்ளதாக அறியக் கிடைக்கின்றது.

சிவில் உடையில் வந்துள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களின் இந்நடவடிக்கை தொடர்பில் மேற்படி முஸ்லிம் பள்ளிகளின் நிருவாகச் சபையினர் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் ஆகியோருக்கு அறிவித்துள்ளனர் என அறியவந்துள்ளது.

# யாழ்ப்பாண பௌத்தர்கள்

அனைவரும் கேள்விப்பட்டும் அறிந்தும் [illegible] வாழும் [illegible] யினர் தமிழ் இனத்தவர்களான இந்து மத பக்தர்களாக உள்ளனர். சிறுபான்மை இனத்தவர்களாக கிறிஸ்தவ மத பக்தர்கள் உள்ளனர். அதேபோன்று வடக்குப் பிரதேசங்களில் இந்து மதக் கோயில்களையே அதிகமாகக் காண முடியுமாயிருந்தது. ஆயினும் யுத்தத்தின் பின்னர் இன்று வடக்குக்குச் செல்கின்ற ஒருவருக்கு இதனை விட வித்தியாசமானதொரு நிலைமையையே காண்பதற்கும் கேட்பதற்கும் முடியுமாயுள்ளது. யு 9 பிரதான வீதி உட்பட அநேகமான பிரதானமான சந்திகளில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழ் பெயர்களால் அழைக்கப்பட்ட ஒருசில நகரங்களுக்கு சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. யுத்தத்தில் இறந்த அங்கத்தவர்களை நினைவு கூர்வதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கல்லறைகளை இன்று காண முடியாதுள்ளது. அதற்குப் பதிலாக இராணுவ வீரர்களின் நினைவுத் தூபிகளை அதிகளவில் காண முடியுமாயுள்ளது. கடந்த தினத்தில் நடைபெற்ற வெசாக் பண்டிகையின் நிமித்தம் யாழ்ப்பாணத்திலும் வெசாக் வலயமொன்று உருவாக்கப்பட்டிருந்ததாக பத்திரிகைகளின் மூலம் அறியக் கூடியதாயிருந்தது. யாழ்ப்பாணத்தில் இவ்வாறானதொரு நிலைமை உருவாகியுள்ளமையைக் காண்கின்ற கேள்விப்படுகின்ற தெற்கின் சிங்கள தேசப்பற்றுள்ளவர்களுக்கு இது பெரும் மகிழ்ச்சிக்குரியதொரு விடயமாகும் என்பதில் சந்தேகமில்லை. டுவுவுது யுத்த ரீதியில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் வடக்கின் இந்து பக்தர்கள் நாற்பெரும் உண்மையைப் புரிந்துகொண்டு பௌத்த மதத்தைத் தழுவி புத்தர் பேரில் உண்டான மகிழ்ச்சியில் இவ்வாறானவற்றைச் செய்கின்றார்களென தெற்கின் சிலர் நினைப்பதாயிருக்கலாம்.

ஆயினும் உண்மை யாதெனில், மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் அரசாங்கத்தின் கட்டளையின் பேரில் அங்குள்ள இராணுவ வீரர்கள் செய்கின்றார்கள் என்பதாகும். இது பெரும் கவலைக்குரியதொரு நிலைமையாகும். மாற்றமானதொரு கலாசாரத்தினுள் வாழ்ந்த வடக்கின் மக்கள் சுதந்திரத்தின் பின்னர் பல வருடங்களாக அஹிம்சை வழியில் தமக்கான ஒரு மொழிக்காகவும் ஆட்சிக்காகவும் போராடி வந்த போதிலும் அதன் மூலம் எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. பின்னர் ஆயுதமேந்தி ஆயுதப் போராட்டத்தில் தமிழ் இளைஞர்கள் இறங்கினர். தற்போது ஆயுதப் போட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளதென்பது உண்மையே. ஆயினும் இந்நாட்டிற்கு வெள்ளைக்கார ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சுதந்திரம் கிடைத்த நாள் முதல் தமது மொழியில் செயலாற்றுவதற்கான சுயாட்சியொன்றுக்காக அப் பிரதேசங்களில் நடைபெற்ற போராட்டம் முடிவடைந்துள்ளதா?

இன்று வடக்கின் மக்கள் அப் பகுதிகளில் தற்போது நடைபெற்று வருகின்ற செயற்பாடுகள் தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றனர் எனக் கூற முடியுமா? LTTE கல்லறைகளில் இருந்தவர்கள் தமது பிள்ளைகளாயிருந்தமையால் வருடத்துக்கு ஒரு முறையாவது அவர்களை நினைவு கூர்வதற்கு வடக்கின் மக்களுக்குள்ள உரிமை கூட இரத்துச் செய்யப்பட்டுள்ளது. பலவந்தமாக ஒவ்வொரு சந்தியிலும் புத்தர் சிலைகளையும் பன் சாலைகளையும் நிர்மாணிப்பதற்கும், வெசாக் வலயமொன்றை நடத்துவதற்கும் தமிழ் பாரம்பரிய கிராமங்களுக்கு சிங்களப் பெயர்களை இடுவதற்கும் தமது பிள்ளைகளின் கல்லறைகளை பிடுங்கி எறிவதற்கும் வடக்கின் மக்கள் ஒருபோதும் உள்ளத்தால் இடமளிக்க மாட்டார்கள். இந்நாட்டின் சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு இந்நிலைமை புரியாமலல்ல. தெற்கின் மக்களை சிங்கள இனவாதத்தில் திளைத்திருப்பதற்குத் தேவையானவற்றைச் செய்து தோற்றம்பெற்று வருகின்ற மக்கள் பிரச்சினைகளை மறக்கடிக்கச் செய்து ராஜபக்ஷ ஆட்சியைப் பேணிக் கொண்டு நடத்துவதற்காகவே அவர்கள் இவ்வாறானவற்றை திட்டமிட்டுச் செய்கின்றனர். ஆயினும் வடக்கின் தமிழ் மக்களது உண்மையான பிரச்சினைகளுக்கு அவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்றை வழங்காது எப்போதும் அவர்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கம் நினைப்பதாயிருப்பின் அது மீண்டுமொருமுறை தவறிழைப்பதாகவே இருக்கும். ஆதலால் அதிகாரப் பகிர்வை அடிப் படையாகக் கொண்ட உண்மையான அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு முதலாளித்துவ அரசாங்கத்தை வற்புறுத்துதல் வேண்டும். ஆயினும் இனவாதத்தில் திளைத்துப் போன ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு அதற்கான பலமும் தேவையும் கிடையாது.

தமிழ் மக்களின் விடுதலை, சுதந்திரம் மற்றும் சனநாயகம் ஆகிய உரிமைகளை வென்றெடுப்பதற்கு, தமக்கே வரையறுக்கப்பட்டதான போராட்டங்களின் மூலமன்றி வடக்கினதும் தெற்கினதும் தொழிலாளர் வர்க்கம் மற்றும் நசுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து மேற்கொள்கின்ற மக்கள் போராட்டத்தினால் மட்டுமே முடியுமாயிருக்கும் என்பதை வடக்கின் மக்களைப் போன்றே வடக்கின் முதலாளித்துவ தமிழ் அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. எவ்வளவுதான் கசப்பாயிருப்பினும் சிரமமாயிருப்பினும் ஐக்கிய சோசலிசக் கட்சியானது முதலாளித்துவத்தை வீழ்த்திவிட்டு ஐக்கிய சோசலிச இலங்கையை கட்டியெழுப்பும் பொருட்டான, வடக்கும் தெற்கும் இணைந்த மக்கள் போராட்டமொன்றுக்காகவே தோற்றுகின்றது. வடக்கின் மக்களது சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைப் பெறுவதற்கு இவ்வாறான சோசலிச ஆட்சியொன்றைக் கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே முடியுமாயிருக்கும்.

டீ. விதானகே.

# 83 கறுப்பு ஜூலையும் இன்றைய தமிழ் மக்களின் பயங்கரம் நிறைந்த நினைவுகளும்

2009 மே மாதம் 18 ஆம் திகதி வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கொலை செய்து பெற்ற யுத்த வெற்றியின் முதலாவது ஆண்டு நிறைவை கடந்த 18 ஆம் திகதி கொண்டாடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஏனைய நாட்களில் உலகத்திற்குக் காண்பிக்க தமிழ் மொழியில் ஒருசில சொற்களையாவது பேசுகின்ற சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அன்றைய தினம் சிங்களத்தில் மட்டுமே உரை நிகழ்த்தினார். சிங்கள ஆதிக்கம் மேலோங்கக் கூடிய வகையில் நடத்தப்பட்ட இந்த விழா மீண்டுமொருமுறை இந்நாட்டின் தமிழ் மக்களை பிரித்து ஒதுக்குகின்றவாறே நடத்தப்பட்டது.

எமது நாட்டில் நடைபெற்ற மிகப் பாரிய தமிழ் மக்கள் படுகொலையான 83 கறுப்பு ஜூலையின் ஆண்டு நிறைவை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்திலேயே இந்த அரசாங்கம் இந்த 'வெற்றியின் ஆண்டு நிறைவை' கொண்டாடியது. கறுப்பு ஜூலைக்கு இன்று 27 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அன்று ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் படுகொலையின் இறுதிக் கட்டமே மே 18 ஆம் திகதி மறைமுகமாக நிறைவு செய்யப்பட்டது. அன்று கொலை செய்யப்பட்டவர்கள் 'பயங்கரவாத "களே" அன்றி சாதாரண தமிழ் மக்கள் அல்லவென்று சிலர் கூறலாம். ஆனால், அவ்வாறு குறிப்பிடப்படுகின்ற பயங்கரவாதிகளுக்கு மேலதிகமாக சாதாரண தமிழ் மக்களும் பெரும் தொகையானோர் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது கொலை செய்யப்பட்டு அல்லது காணாமல் போயுள்ளனர் என்பது இப்போது மிகத் தெளிவாகியுள்ளது.

இந்த நிலைமையிலுள்ள தமிழ் மக்கள் பயங்கரமான நினைவுகளை இன்னும் பல பரம்பரைகள் செல்லும் வரை மறக்கப் போவதில்லை. அந்தப் பயங்கர நினைவின் சிவப்புக் குருதிக் கறைகள் தொடர்ந்தும் இருக்கக் கூடிய வகையிலேயே அரசாங்கம் செயலாற்றுகின்றது. சிங்கள மக்கள் மத்தியில் "கவ்போய்" வீரச் செயல்களைக் காட்டுவதற்கு அரசாங்கம் செய்கின்ற வேலைகள் தமிழ் மக்களின் இருதயத்தைத் துளைத்துச் செல்கின்ற கத்திக் குத்தைப் போன்றுள்ளது. யாழ்ப்பாணத்திலும் வடக்கின் ஏனைய நகரங்களிலும் அமைக்கப்பட்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ. வீரர்களின் நினைவுச் சின்னங்கள், கல்லறைகள் அனைத்தும் சென்ற



வருடத்தில் அழித்தொழிக்கப்பட்டது. இவை பயங்கரவாதிகளுக்காகக் கட்டப்பட்டவை என்பதால் அவற்றிற்கு இடமளிக்க முடியாது என்பதும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய ஒரு அடையாளத்திற்குக் கூட இடமளிக்க முடியாதென்பதுமே அரசாங்கத்தினதும் சிங்கள இனவாதிகளினதும் தர்க்கமாயுள்ளது. ஆயினும், குறிப்பாக கல்லறைகள் இறந்தவர்களுக்காகவே உள்ளன. அவர்களின் குடும்பத்தினர்களுக்கு அவை மிகவும் பாசத்திற்குரிய நினைவுச் சின்னங்களாகும். தமிழர்களின் கல்லறைகள் உடைக்கப்படுகின்ற போது கோடாபயவின் இராணுவம் வடக்கின் அனைத்து நகரங்களிலும் இராணுவ வீரர்களுக்கான நினைவுச் சின்னங்களைக் கட்டுகின்றனர். கொழும்பிலிருந்து பிக்குமார்களை அழைத்துச் சென்று அவற்றில் ஞாபகார்த்தக் கூட்டங்களை நடத்துகின்றனர். தமிழ் மக்கள் இதனை, தமது பிள்ளைகளைக் கொன்ற, தமது பூர்வீகப் பிரதேசங்களை ஆக்கிரமித்த, வெளியார்களின் நினைவுச் சின்னங்களாகவே கருதுகின்றனர். இறுதியில் இவை வடக்கின் தமிழ் மக்களையும் தெற்கின் சிங்கள மக்களையும் பிரித்து வைக்கின்ற அடையாளச் சின்னங்களாகவே இருக்கப்போகின்றன. அரசாங்கம் வெற்றி விழாக் கொண்டாடுகின்ற நாளன்று தொலைக்காட்சியில், "இராணுவ வீரர்களின் நினைவுச் சின்னத் 'தக்கு" பக்கத்தில் வந்து இறந்த இராணுவ வீரர்களின் உறவினர்கள் – மனைவிமார், பிள்ளைகள் அழுது புலம்பி மலர்ச் செண்டுகளை வைத்தமையே எமக்கு காட்டப்பட்டது. தமிழ் போராளிகளின் – அரசாங்கம் கூறுகின்ற பயங்கரவாதிகளின் குடும்பத்தினர்களும் அவ்வாறுதான் தமது இறந்த கணவன், பிள்ளை ஆகியோரை நினைவுகூர்கின்றனர். கொழும்புக் கண்ணீருக்கும் – யாழ்ப்பாணக் கண்ணீருக்கும் இடையே வித்தியாசம் இல்லை. அத்தகைய கண்ணீருக்கு ஆளும் வர்க்கத்தினரும், முதலாளித்துவ அரச ஊடகங்களும் கொடுக்கின்ற வரைவிலக்கணங்களில் மட்டுமே வித்தியாசம் உள்ளது. குறைந்தது தெற்கின் தாய்மார்களுக்கு – மனைவிமார்களுக்கு தமது இறந்த அன்புக்குரியவரை நினைவுகூர்ந்து உலகத்திற்குக் காண கண்ணீர் வடிப்பதற்காவது உரிமை இருக்கின்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மட்டக்களப்பு தாய்மார்களுக்கு – மனைவிமார்களுக்கு அவ்வாறு அழுவதற்குக் கூட உரிமை இல்லை. கோட்டாபயவின் சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு அழுவது தண்டனைக்குரியதொரு தேசத் துரோகச் செயலாகும்.

கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்கத்தை தோல்வியுறச் செய்து, அரசாங்கம் கூறுகின்ற சமாதானம் 2007 ஆம் ஆண்டிலேயே தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் கடத்திச் செல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பலரைப் பற்றிய விபரம் கடந்த தினத்தில் டீ.டீ.ஊ வானொலியில் ஒலி பரப்பப்பட்டது. இராணுவ பொலிஸ் உடை தரித்த – ஆயுதம் ஏந்திய நபர்கள் வந்துதான் இந்த ஆட்கடத்தல்களைச் செய்துள்ளனர். அவர்களைப் பற்றி இதுவரை எவ்விதத் தகவல்களும் இல்லை. தெற்குக்குக் கிடைத்த சமாதானம், நிம்மதி வடக்கின், கிழக்கின் மக்களுக்கு இன்னமுமே கிடைக்கவில்லை என்பதே இதன் மூலம் தெளிவாகின்றது. லீன் பெஸ்கோற், யசுசி அகாசிக்கு நன்றாக அலங்கரிக்கப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளைக் காட்டி, அவர்கள் சிரிப்பதைக் காட்டி புகைப்படங்களை எடுத்துக் காட்டிய போதிலும், தமிழ் மக்களின் உள்ளங்களில் இன்னமுமே தீப் பற்றுகின்றது. மஹிந்த – கோட்டாபய அரசாங்கத்தின் வேலைகளின் காரணமாக அந்தத் தீச் சுவாலை மென்மேலும் அதிகரிக்கின்றது. இந்தத் தீயை அணைக்கின்ற வேலைத்திட்டமொன்று இப்போதே ஆரம்பிக்கப்படாவிடின் அண்மிய தொரு காலத்தில் இந்நாடு மீண்டும் ஒரு முறை கருகிச் சாம்பலாகலாம். இந்தப் பின்னணியிலேயே வடக்கு – கிழக்கு மக்களின் அதிக வாக்குகளை கட்சிக் கேர்களில் பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பு வியே என்ன செய்கின்றது என்பது முக்கியமாக உள்ளது. அவர்கள் அண்மையில் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தார்களா என்பது சரிவர அறியக் கிடைக்கவில்லை. வடக்கு – கிழக்கு இணைந்த மாகாணத்திலுள்ள தமிழ் பேசுகின்ற மக்களுக்கான உண்மையான அதிகாரப் பரவலாக்கலுக்காகவே அவர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். இது ஒரு அரசியல் வேண்டுகோள். வியே இது தொடர்பில் பாரதூரமான விதத்தில் தோற்றுவதெனில், தாம் இதுவரை கடைப்பிடித்த உபாய வழிமுறைகள் வெற்றியளிக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதையே அவர்கள் முதலாவதாகச் செய்தல் வேண்டும். தெற்கின் இடதுசாரிகள் மற்றும் முற்போக்குவாதிகள் தமிழ் மொழியைப் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல் வரை தோற்றுகின்றனர் என்பதை அவர்கள் நன்றாக அறிந்துள்ளனர். (ஆதலால் அதற்குக் குறைவான ஒன்றுக்கு ஒத்துழைப்பு வழங்குவது அவர்களுக்குப் பிரச்சினையாக இருக்காது).

தமிழ் தலைவர்கள் தெற்கின் முற்போக்குவாதிகளுடன் ஒன்றுசேர்வதைப் போன்றே இடதுசாரிகளான நாம் மீண்டும் வடக்குக்கு – கிழக்குக்கு எமது கைகளை நீட்ட வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மற்றும் அம்மக்களினதும் அதேபோன்று மலை நாட்டு தமிழ் மக்களினதும் அரசியல் உரிமைகளுக்காக தோற்றுவது மட்டுமன்றி போராடுவதற்கும் நாம் தயார் என்பதை நாம் மீண்டும் எடுத்துக்காட்டுதல் வேண்டும். வடக்கினதும் தெற்கினதும் மக்களை ஒன்றிணைக்கின்ற ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு இடதுசாரி இயக்கத்தினால் மட்டுமே முடியுமாயிருக்கும். 83 தமிழர் எதிர்ப்பு கறுப்பு ஜூலையின் மூலமும் கடந்த வருடம் யக்கம் முடிவுற்றதன் பின்னரும் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிங்கள முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினரால் முடியாதென்பது மீண்டுமொருமுறை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதற்குத் தீர்வுகளை வழங்குவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் கஷ்டப்படும் மக்கள் சோசலிச வேலைத் திட்டத்தைச் சுற்றி ஒன்று திரளுதல் இன்றைய யுகத்தின் கடமையாக உள்ளது.

ஸ்ரீநாத் பெரேரா.

படிப்பகம்

செந்தாரகை
53/6, ஈ.டீ. தாபரே மாவத்தை, கொழும்பு 05
தொ. 011 4510289, 011 2504647
www.lankasocialist.com

# மக்களுக்கு 'நட்சத்திரங்களைக்' காட்டிய iffa

சர்வதேச இந்திய சினிமா அகடமி ஐஃபா ஜூன் மாதம் 4–5 ஆகிய இரு தினங்களில் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த விழாவின் மூலம் எமது நாட்டிற்கு எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய சாதகமான வாய்ப்புகளைப் பற்றி பெருமை பேசுகின்ற வகையில் உரையாற்றிய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், இந்த விழாவின் ஊடாக எமது நாட்டிற்கு நேரிடுகின்ற அவமானம் மற்றும் நாட்டை இந்தியாவுக்குக் காட்டிக் கொடுத்தல் தொடர்பாக அறிந்திருந்ததா என்பதைப் பற்றி எமக்குச் சந்தேகமாக உள்ளது. இவ்வாறு கூறுவதற்கான முக்கியமான காரணம், ராஜபக்ஷ அரசாங்கம் எப்போதுமே ஓதுகின்ற தேசாபிமானம், எமது தேசம் மற்றும் வெளிநாட்டு நிர்ப்பந்தம் என்ற மந்திரத்தை அவர்கள் மறந்துள்ளமையினாலும் இலங்கையின் தனித்துவத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்துள்ளமையினாலுமே என்பதை அறுதியிட்டுக் கூற வேண்டியுள்ளது.

அது மட்டுமன்றி தற்போது அறியக்கிடைத்துள்ளவாறு, இந்த விழாவை இலங்கைக்கு கொண்டு வரும் பொருட்டு சிங்கப்பூருடன் போட்டியிடுவதற்கு இலங்கைக்கு நேரிட்டதோடு அதில் சிங்கப்பூரை விட அதிக விலைக் கேள்வியினை வழங்கி இந்த விழாவை இலங்கையில் நடத்துகின்ற வாய்ப்பு பெறப்பட்டுள்ளது. இங்கு இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சு, இந்த விழாவை இலங்கை பெற்றதன் பின்னர் ஐஃபா ஊடாக இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்த முடியுமென்றும், இதன் மூலம் 30 வருட கால யுத்தத்தின் பின்னர் இலங்கை முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுள்ள, பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு எவ்விதத் தடைகளுமற்ற நாடாகும் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்ட முடியுமென்றும் கூறியுள்ளது.

மேலும், இந்த விழாவின் உட்புறத்தைப் பற்றியும் புதிதாக இந்தியாவினுள் உருவாகியுள்ள நெருக்கடி நிலைமையைப் பற்றியும் சிறிதளவு கவனம் செலுத்துவோமெனில், இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் எதிர்ப்பை புறந்தள்ளிவிட்டு இந்த விழாவை இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதென்பதை காணக் கூடியதாய் உள்ளது. ஆயினும் இந்திய மாநிலங்களான தென் இந்தியாவின் கேரளம், தமிழ் நாடு, கர்நாடகம் ஆகிய பிரதேசங்களில் தமிழ் மக்களின் எதிர்ப்பின் காரணமாக இந்தியாவின் பெரும் நடிக நடிகைகளாகக் குறிப்பிடப்படுகின்றவர்கள் இந்த விழாவில் கலந்துகொள்ளாதிருக்கும் அளவிற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்பது தற்போது பகிரங்கமாகியுள்ளது. தென் இந்தியாவின் பிரசித்திபெற்ற திரைப்பட இயக்குனர் மணிரத்னம் உட்பட எந்தவொரு தமிழ் கலைஞரும் இலங்கைக்கு வருகை தராதிருந்தமை குறிப்பிடத்தக்கதாயிருந்தது. இந்த நிர்ப்பந்தத்தின் விளைவாக ஐஃபா குழுவின் தூதுவராகச் செயலாற்றுகின்ற அமிதாப் பச்சன், அவரது மகன் மற்றும் மருமகள் ஆகியோர் இவ்விழாவுக்கு வருகை தர மறுத்துவிட்டனர். தென் இந்திய மக்களின் எதிர்ப்பின் அளவைக் கூறுவதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை. உண்மையிலேயே ஐஃபா விழாவுக்காக இலங்கைக்கு இந்தியாவின் இரண்டாம் தரத்திலுள்ள பொம்மை நடிக நடிகையரே வருகை தந்தனர்.

மேலும், இவ்விடயங்களுக்கு மேலதிகமாக ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டிற்கு மேலதிகமாக அரசாங்கத்திற்கு வரி செலுத்துகின்ற பொது மக்களின் பணத்தை கூச்சமின்றி நாசமாக்குகின்ற இயக்கமொன்றும் இதற்குப் பின்னணியில் செயற்பட்டதென்பதை வீதிகளில் காணக் கூடியதாயிருந்தது. இரண்டு அடைமழை பெய்தாலே வெள்ளத்தில் மூழ்கின்ற கொழும்பு நகரம், விமான நிலைய வீதி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை தற்காலிக சொர்க்கமாக மாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சியெடுத்தது. ஐஃபா விழாவுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் காணாதிருந்த மலர்ச் செடிகள் மேற்படி நாட்களில் வீதிகளுக்கு நடுவே முளைத்திருந்தன. இவை சில தினங்களில் மறைந்துவிடும் என்பதை கூற வேண்டியதில்லை. இந்தப் பண விரயத்தின் அளவினைப் பற்றி சிறிது காலம் சென்றதன் பின்னரும் மேலும் இரண்டு மூன்று அடைமழை பெய்ததன் பின்னருமே எம்மால் மதிப்பிட முடியுமாயிருக்கும்.

தென் இந்திய மக்களின் எதிர்ப்பு மற்றும் அமிதாப் பச்சன், சாருக்கான் போன்ற இந்தியாவின் பெரும் நடிகர்களாகப் பொது மக்களால் அழைக்கப்படுகின்ற பொலிவூட் நடிக நடிகைகள் வராதிருந்தமையின் முன்னிலையில் தான் அறியாமலே தனது ஆடை அவிழ்கின்றதென்பதை ராஜபக்ஷ போன்றோர்கள் விளங்காதிருந்தமையே இங்கு மிக முக்கியமாயுள்ளது. இந்தத் தீர்மானத்தின் முன்னே ஐஃபா வினால் இலங்கைக்கு கிடைக்கின்ற புகழை விட அவமானத்தின் சதவீதம் அதிகரித்துள்ளதென்பது வெட்கமற்ற ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு அதிசயிக்கத்தக்கதொரு விடயமாகும். மேலும், தமது மற்றும் அரசாங்கத்தின் நிலைத்திருத்தலின் பொருட்டு எப்போதும் நாடு, தேசம், மதம் என்ற மந்திரத்தை ஓதுகின்ற விமல் வீரவங்ச, சம்பிக்க ரணவக்க போன்ற பொய்யை படைக்கின்ற தேசப்பற்றுள்ளோர் இக்காலத்தில் இருந்தார்களா என்ற



சந்தேகத்தை மக்கள் முன் எழுப்ப வேண்டியுள்ளது. எமது நாட்டின் கலைகளையும் திரைப்படங்களையும் மேம்படுத்தல் இதன் ஒரு நோக்கமாகும் என்றும் பெருமை பேசினார்கள். ஆயினும் இலங்கையில் கலைஞர்கள், திரைப்படத்துறையினர் இருக்கின்றனரா என்பதையே அமைப்பாளர்கள் மறந்திருந்தார்கள் என்பதை நிகழ்ச்சி பூராவும் காணக்கூடியதாயிருந்தது. எமது நாட்டின் தேர்ச்சிபெற்ற கலைஞர்கள் எவருக்கும் ஐஃபா வில் எவ்வித இடமும் அளிக்கப்படவில்லை. அசோக ஹந்தகம, பிரசன்ன விதானகே பதிராஜ, தர்மசிறி ஆகிய தேர்ச்சிமிக்க படைப்பாளிகள் இருக்கின்றார்கள் என்பது கூட அரசாங்கத்தின் அடிவருடிகளுக்கு நினைவுக்கு வரவில்லை. இதற்குப் பதிலாக நாமல் ராஜபக்ஷ அரச குமாரன் கிரிக்கட் போட்டி தொடக்கம் எல்லா மூலை முடுக்கிலும் இருந்தாரென்பதோடு அரசாங்கத்தின் பட்டியலிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரான மாலினி பொன்சேகா போன்றோருக்கு பார்வையாளராக மாத்திரமே இருக்க வேண்டி நேரிட்டது.

யசிந்த ஜனக.

# மீள் இணக்க ஆணைக் குழுவும் யுத்தக் குற்றச் செயல்களும்

யுத்தக் குற்றம் செயல்கள் தொடர்பான பலத்த குற்றச் சாட்டுகள் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மீண்டும் மேலெழத் தொடங்கியுள்ளன. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஏறத்தாழ (40,000) நாற்பதாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டார்கள் என எழுப்பப்படுகின்ற குற்றச்சாட்டே புலீ சலுகை கிடைக்காமை தொடர்ந்து நீடிப்பதற்கான ஒரு காரணமாக அமைந்துள்ளது. இது தொடர்பாக ஒரு விசாரணை நடத்துமாறு ஐரோப்பிய சங்கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக கோபமடைந்துள்ள அரசாங்கம் தாம் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்கான விடயங்களை முன்வைப்பதற்குப் பதிலாக எதிர் தரப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து தப்பித்துக் கொள்வதற்கான கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. சர்வதேச ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தால் சரத் பொன்சேகாவுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதாக பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ விடுத்துள்ள கூற்று அவ்வாறான பித்தும் பிடித்ததொரு கூற்றாகும். இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னிலையில் முன்னாள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பிலான ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதாக வாக்குறுதி அளித்தார். ஆயினும் ஜீ.எல். பீரிஸ் உட்பட அரசாங்கம் இது தொடர்பில் இப்போது முழுமையாகவே மௌனமாயுள்ளது.

இதற்குப் பதிலாக அரசாங்கம், கள்வனின் தாயிடம் குறி கேட்பதைப் போன்றதொரு செயலையே செய்துள்ளது. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள மீள்இணக்க ஆணைக் குழு (Truth and Reconciliation Commission) இதை விட வித்தியாசமானதொன்றல்ல. பிரசித்திபெற்ற சதசிவம் கொலை வழக்கு தொடர்பில் தோற்றிய சொல்வின் ஆர் டி சில்வா, உரிமையாளர் அற்ற ஒரு உலக்கை கொலை செய்துள்ளதாக நீதிமன்றத்தின் முன்னிலையில் நிரூபித்ததைப் போன்று மீள்இணக்க ஆணைக் குழு, யுத்த காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் மேலெழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு உரிமையாளர்கள் அற்ற துப்பாக்கிகளை குற்றவாளியாக்குதலும் நடைபெறலாம். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அவ்வளவு தூரத்திற்கு பகிடியானதாக உள்ளதைப் போன்றே மறுபுறம் பயங்கரமானதாகவும் உள்ளது.



உண்மையிலேயே இந்த ஆணைக் குழு, மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதா? யுத்தக் குற்றச் செயல்கள் நடைபெற்றுள்ளதா என்பதை ஒழுங்காக ஆராயுமா? அரசாங்கத்தின் கடந்த காலச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை அவ்வாறு நடைபெறலாம் என தீர்மானிக்க முடியாது. மஹிந்த ராஜபக்ஷ சனாதிபதியினால் 2007 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட ... ஆணைக் குழுவின் அறிக்கை இன்று வரை வெளியிடப்படவில்லை. அன்று அந்த ஆணைக் குழு, பாரதூரமான விதத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்பட்ட 16 சம்பவங்களை விசாரணை செய்வதற்காகவே நியமிக்கப்பட்டது. அதில் ஆராயப்பட வேண்டியிருந்த பிரதானமான சம்பவங்களாக, திருகோணமலை கடற் கரையில் ஐந்து தமிழ் பல்கலைக் கழக மாணவர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் கொலை செய்யப்பட்டதாக விடுக்கப்பட்ட குற்றச்சாட்டு, திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் எக்ஷன் பாம் (பேம்) எனும் அரச சார்பற்ற அமைப்பில் சேவையாற்றிய தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்கள் 17 பேர் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த அப்பகுதியில் கொலை செய்யப்பட்ட சம்பவம் உள்ளிட்ட 16 சம்பவங்கள் உள்ளடங்கியிருந்தன. இந்தியாவின் முன்னைநாள் நீதியரசராயிருந்த பீ.என். பகவதீயின் தலைமையிலான சர்வதேச குழுவுக்கு மேற்படி உதலாகம ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கான வாய்ப்பும் அன்று அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் என்ன நடைபெற்றது? சர்வதேச அவதானிப்புக் குழுவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தாமையினால் உருவாகிய முரண்பாட்டின் அடிப்படையில் அப்பிரதிநிதிகள் நாட்டிலிருந்து வெளியேறினர். இறுதியாக உதலாகம ஆணைக் குழுவின் அறிக்கையை இன்று வரை அரசாங்கத்தினால் வெளியிடுவதற்கு முடியாதுள்ளது. அவ்வாறெனில், மீள்இணக்க ஆணைக் குழு எனப்படுகின்ற இக்குழுவின் மூலம் யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளதா என்ற விடயம் ஆராயப்படும் என எதிர்பார்க்க முடியாது. ஆதலால், மேற்படி மீள்இணக்க ஆணைக் குழுவின் மூலம் அநேகமாக, இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களில் நடைபெற்றதைப் போன்று ஒருபோதும் அறிக்கையொன்று வெளியிடப்படுதல் நடைபெறப் போவதில்லை. இன்றேல், 2002 ஆம் ஆண்டிலிருந்தான சம்பவங்களை ஆராய்வதற்கே ஆணைக் குழுவுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதால், சில நேரம், வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு மூன்று கொட்டம்பாக்கு என்றதைப் போன்றதொரு விதப்புரை வெளிவருவதற்கும் வாய்ப்புள்ளது. யுத்தக் குற்றச் செயல்களைப் பற்றி ஆராய்வதற்குத் தயாராயுள்ள போதிலும் பயங்கரவாதத்தைத் தோல்வியுறச் செய்தவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள தாம் தயாராயில்லை என (பயங்கரவாதத்தை தோல்வியுறச் செய்தவர்களின் பழைய வீரரான சரத் பொன்சேகாவைத் தவிர) கடந்த தினத்தில் அல்ஜசீரா தொலைக்காட்சியுடன் நடத்திய நேர்காணலில் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ள கூற்றின்படி, இந்த ஆணைக் குழுவின் மூலம் ஒரு அறிக்கை வெளியிடப்படினும் அதன் இறுதிப் பெறுபேற்றைப் புரிந்துகொள்ளச் சிரமமாக இருக்காது.



தயானந்த ஜயசூரிய

www.padippakam.com

# சர்வதேச தலையீடுகள் அதிகரிப்பு

இந்நாட்களில் சர்வதேச பிரதிநிதிகள் வரிசையாக ஒருவர் பின்னால் ஒருவரா் வரத் தொடங்கியுள்ளனர். முதலாவதாக சீன துணைப் பிரதமர் உள்ளிட்ட பிரதிநிதிகள் சிலர் வந்து பல கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். சீனா இலங்கைக்கு அமெரிக்க டொலர் 3057 மில்லியன் உதவி மற்றும் கடன்களை வழங்கியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இதில் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு டொலர் 306 மில்லியனும், கொழும்பு — கட்டுநாயக்க கடுகதி வீதியின் பொருட்டு டொலர் 242 மில்லியனும், மத்தள (அம்பாந்தோட்டை) விமான நிலையத்திற்கு டொலர் 190 மில்லியனும், முன்னுரிமைக் கொள்வனவாளர்களின் கடன் உதவியாக (ºசநகநசநவெயைட டிரலநசள உசநனவை டழயளெ) டொலர் 891 மில்லியனும் உள்ளடங்குகின்றது. இந்தக் கடன் வழங்கல்களுக்கு மேலதிகமாக சீன அரசாங்கம் அவர்கள் தலையீட்டில் நடைபெறுகின்ற கருத்திட்டங்களுக்கு சீனத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகையிலுமான தொழில்நுட்பவியலாளர்களை சீனாவிலிருந்து இந்நாட்டிற்கு அழைத்து வந்துள்ளனர். இந்த எண்ணிக்கை ஏறத்தாழ 25,000 (இருபத்தையாயிரம்) அதனோடு பெருமளவில் சீனாவில் குற்றச் செயல்கள் தொடர்பில் குற்றவாளிகளாகிச் சிறையில் அடைக்கப்பட்டவர்களை எமது நாட்டிற்கு கொண்டு வந்துள்ளமை மிகப் பாரதூரமானதாயுள்ளது. அது மட்டுமன்றி சீன அரசாங்கத்துடன் தொடர்புடைய கருத்திட்டங்களுக்கு சீமெந்து, கல் போன்ற அனைத்து மூலப்பொருட்களும் (மணல் தவிர) சீனாவிலிருந்து எமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. அபிவிருத்தியின் போர்வையில் உள்நாட்டு ஒப்பந்தகாரர்களான அரசாங்கத்தின் அடிவருடிகளுக்கு தரகுத் தொகைகளை கொள்ளையடிப்பதற்கு இடமளித்து நடைபெறுகின்ற இந்த அழிவு பாரதூரமானதொன்றாகும். டுவுநுருவுநு யுத்த காலத்தில் அரசாங்கத்தின் மிக நெருங்கியதொரு நண்பராக சீனாவே இருந்தது. சீனாவின் மிகப் பெரிய யுத்த உதவி அரசாங்கத்திற்குக் கிடைத்தது. இப்போது அதற்கான நட்டஈட்டை நாடும் மக்களும் செலுத்த வேண்டி நேரிட்டுள்ளது.

யப்பான் விசேட தூதர் யசுசி அகாஷியும் அண்மையில் இலங்கைக்கு மீண்டும் வருகை தந்தார். ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பென்கி மூனின் அரசியல் மதியுரையாளர் லின் பெஸ்கோவும் வருகை தந்து பத்திரிகையாளர் மாநாடொன்றையும் நடத்திவிட்டுச் சென்றார். இதற்கு மத்தியில் அமெரிக்க சனாதிபதி ஒபாமாவின் தூதர் தேசிய பாதுகாப்புச் சபையின் பணிப்பாளர் சமந்தா பவரும் அண்மையில் இந்நாட்டிற்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தைகள் பலவற்றிலும் ஈடுபட்டார்.இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பில் விடுக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவ்வளவு அதிகமான தூதர்கள் வருகை தந்தனர் என்பது தெளிவாகின்றது. ஆயினும் ஊடக அமைச்சர் ரம்புக்வெல்ல மக்களை ஏமாற்றிவிட்டு தப்ப முயற்சிப்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

### இந்தியக் காரணி

இந்த நிகழ்வுகளுக்கு மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் விசேட விஜயமொன்றின் பொருட்டு ஜூன் மாதத்தின் ஆரம்பத்தில் யுத்தத்திற்குப்



பிந்திய நிலைமையைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்கே புது டில்லிக்குச் சென்றார். தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பில் ஏதேனுமொரு தீர்வுக்காக ராஜபக்ஷ அரசாங்கம் செயலாற்றுதல்



பிரச்சினை நாட்டின் எல்லைகளைக் கடந்து சர்வதேசப் பிரச்சினையாக வளர்ந்து வருகின்றது. ஐரோப்பாவில் வசிக்கின்ற தமிழ் 'டயஸ்போரா' தேசிய

இந்நிலைமையினால் இலங்கையின் தேசிய பிரச்சினை பற்றிய கலந்துரையாடல் முக்கியமாக மூடி மறைக்கப்பட்டிருப்பினும், தமிழ் நாடு மற்றும் ஐரோப்பாவின் ஊடாக இலங்கையின் தேசிய பிரச்சினை மீண்டும் மேலெழும்பத் தொடங்கியுள்ளது. இதன்படி தேசிய பிரச்சினைக்கு நியாயமானதொரு அரசியல் தீர்வு சமர்ப்பிக்கப்படாதிருப்பின் தென் இந்தியாவும் ஐரோப்பிய தமிழ் 'டயஸ்போரா'வும் ஒன்றிணைந்த ஒரு வேலைத்திட்டமாக அப்போராட்டம் எதிர் காலத்தில் உருவாகலாம். இந்தியாவை இத் திக்கிடங்கிலிருந்து காப்பாற்றுவதற்காகவே மன்மோகன் சிங் உள்ளிட்ட இந்திய முதலாளித்துவ வர்க்கம் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு ஏதேனுமொரு விதத்திலான ஒரு தீர்வை வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கின்ற வட்டத்தினை மீண்டும் ஆரம்பித்துள்ளது. தாமும் தப்பித்து உருவாகி வருகின்ற தமிழ் மக்களின் எதிர்ப்பிலிருந்து

# சீனாவின் நிர்ப்பந்தம்

வேண்டுமென்பது இந்திய அரசாங்கத்தின் தீவிர நிலைப்பாடாக உள்ளது. எல்.ரீ.ரீ.ஈயை ஒடுக்கும் பொருட்டு இந்திய அரசாங்கம் மஹிந்தவுக்கு இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ஒத்துழைப்பு வழங்கியது. தேசிய பிரச்சினையைத் தீர்த்தல் எவ்வாறிருப்பினும், வடக்கில் இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காவது ராஜபக்ஷ அரசாங்கம் தற்போது நடவடிக்கையெடுப்பதில்லை எனக் கூறி சென்னை மற்றும் டில்லி ஆகிய நகரங்களில் மஹிந்தவின விஜயத்திற்கு எதிராக பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது இதனாலாகும்.

'வாறாயினும், சீனாவும் இந்தியாவும் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தலையிடுகின்ற போர்வையில் தமது நாடுகளின் ஆதிக்கத்தை இலங்கையினுள் பேணிவருவதற்கான போட்டி ரீதியிலான ஒரு வேலைத்திட்டம் நடைபெறுகின்றது. இந்திய அரசாங்கம் வடக்கில் 50,000 வீடுகளை கட்டுவதற்கு உதவி வழங்குதல் உள்ளிட்ட வடக்குப் புகையிரதப் பாதையை அமைத்தல், காங்கேசன்துறை துறைமுக மறுசீரமைப்பு மற்றும் சீமெந்துத் தொழிற்சாலையைக் கட்டியெழுப்புதல், பலாலி விமான நிலையத்தின் மறுசீரமைப்பு ஆகிய நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. இது தொடர்பாகக் கிடைக்கின்ற நிதி உதவிகளுக்கு மேலதிகமாக பெரும் தொகையில் இந்திய தொழில்நுட்பவியலாளர்கள், மற்றும் தொழிலாளர்களை இந்நாட்டிற்கு அழைத்து வருவதற்குத் தேவையான உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. (இவை அனைத்திற்கும் மேலதிகமாக சீபா வர்த்தக உடன்படிக்கை இந்த வருட இறுதியில் கைச்சாத்திடப்படவுள்ளது). மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின், மஹிந்த சிந்தனை தேசப்பற்றுமிக்க வேலைத்திட்டம் எனக் கூறப்படுவதன் கீழ் எமது நாட்டினுள் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடமளித்து உள்நாட்டு வளங்களைச் சூறையாட இடமளிக்கப்பட்டுள்ளதென்பதைக் காணலாம்.

### தேசிய பிரச்சினையின் படிப்படியான வளர்ச்சி

பிரச்சினையொன்று இல்லையென்ற அளவுக்கு அரசாங்கமும் சிங்கள இனவாதப் பிரிவுகளும் இந்நாட்களில் செயற்பட்ட போதிலும் தேசிய பிரச்சினைக்கான ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கும், யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் அந்தந்த நாடுகளை நிர்ப்பந்தித்து வருகின்றது. தென் இந்தியாவின் நிலைமை இந்நிலைமையை விட சூடுபிடித்த இயல்பைக் கொண்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் விஜயத்திற்கு தமிழ் நாட்டிலிருந்து உருவாகிய எதிர்ப்பு இதற்குச் சான்றாக உள்ளது. யுத்தம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட 13 வது அரசியலமைப்புச் சட்டத்திற்கும் அப்பால் செல்கின்ற தீர்வொன்றைத் தருவதாக மஹிந்த வாக்குறுதியளித்தார் என்பதோடு, இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகள் அதனை நம்பின. ஆயினும் மஹிந்த தற்போது அந்த வாக்குறுதியை மறந்துவிட்டு வடக்கில் இராணுவ முகாம்களை அதிகரிக்கச் செய்து, தமிழ் கிராமங்களின் பெயர்களைக்கூட மாற்றியமைத்து, சிங்கள பௌத்த கலாசாரத்தை பலவந்தமாக வடக்கின் மக்கள் மீது திணித்து வருகின்றது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தின் நிலைமையும் வடக்கின் நிலைமைக்கு வித்தியாசமானதல்ல. உண்மையிலேயே மஹிந்த ராஜபக்ஷ தற்போது, ரணில் அறிமுகப்படுத்திய உலகளாவிய முதலாளித்துவ வேலைத் திட்டத்தை குறைபாடுகளின்றி செயற்படுத்தி மேலைத்தேய ஏகாதிபத்தியவாதிகள் உள்ளிட்ட அனைத்து பலசாலிகளினதும் ஒத்துழைப்பை அதனூடாகப் பெறுவதற்காகவே செயலாற்றி வருகின்றார்.

கருணாநிதியையும் காப்பாற்றுவதற்காகவே, அரசியல் தீர்வொன்றை விரைவாகச் சமர்ப்பிக்குமாறு தாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அறிவித்ததாக குறிப்பிட்டு பொய் நித்திரையில் ஆழ்ந்துள்ள கருணாநிதிக்கு ஒரு கடிதத்தை மன்மோகன் சிங் எழுதினார்.

தேசிய பிரச்சினைக்கு காலனித்துவ நாடுகளின் முதலாளித்துவத்தினால் தீர்வு வழங்க முடியாதென மாக்சியவாதிகள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டியுள்ளனர். உலகளாவிய முதலாளித்துவ அழிவுக்கு எதிராக உலகம் பூராவும் கட்டியெழுப்பப்பட்டு வருகின்ற வர்க்கப் போராட்டங்களுடன் ஒன்றிணைந்து எமது நாட்டில் முதலாளித்துவத்தை தோல்வியுறச் செய்து சோசலிச மாற்றமொன்றை உருவாக்குவதன் மூலம் மட்டுமே தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். இந்த கசப்பான உண்மையைப் புரிந்துகொண்டு வடக்கிலும் தெற்கிலும் உள்ள நசுக்கப்பட்ட மக்கள் தெற்கின் நசுக்கப்பட்ட மக்களுடன் ஒன்றுசேர்ந்து உரிமைகளை வென்றெடுக்கின்ற போராட்டத்தில் இணைதல் வேண்டும். அதற்காக மக்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட கரில்லாப் போராட்டங்களின் ஊடாக தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென்பது மிகவும் கசப்பான பாடங்களின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. வெற்றிக்கான ஒரே வழி சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய நசுக்கப்பட்ட மக்களின் ஐக்கியமான மக்கள் போராட்ட வழி மட்டுமேயாகும்.

**தாரக.**

එක්සත් සමාජවාදී පක්ෂය
ஐக்கிய சோசலிச கட்சி
UNITED SOCIALIST PARTY

ஐக்கிய சோசலிச இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக நீங்களும் சேருங்கள். நீங்கள் எங்களோடு தொடர்புகொள்வதற்கு அல்லது கலந்துரையாடுவதற்கு விரும்பினால் இக்கூப்பனை நிரப்பி அனுப்புங்கள்

பெயர் ..........
வயது ..........
முகவரி ..........
..........
தொழில் ..........

SENTHARAHAI
No. 53/6, E.D. Dhabare Mawatha, Narahenpita, Colombo - 05.
Tel: 011 4510289 Fax: 011 2504647